[1998 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

பிற்பகல் 12-10

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எழுப்பியிருக்கின்ற பிரச்சினை உள்ளபடியே முக்கியமான பிரச்சினைதான். ஆனால், ஒரு தவறான அடிப்படையில் வெளிவந்துள்ள செய்தி குறித்து எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையாகவே நான் இதைக் கருதுகிறேன். ஏனென்றால், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது அளிக்கப்பட்டதை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறோம். ஆளுநர் உரை என்றால் அது முழுக்க, முழுக்க அரசாங்கத்தினுடைய உரைதான். அரசாங்கத்தினுடைய உரை முதலமைச்சரால்தான் தயாரிக்கப்படுகிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவார்கள். அந்த அறிக்கையிலேயே, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், விஞ்ஞானி திரு. அப்துல் கலாம் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள 'பாரத ரத்னா' விருதுகளுக்காக அரசின் சார்பில் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, ஆளுநர் அந்த உரையைப் படிக்கும்பொழுதே அவையிலேயுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுடைய கையொலி மூலமாக அவர்களுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, முக்கியமாக ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். தேர்தல் நேரத்திலேதான் சி.எஸ். அவர்களுக்கு அந்த 'பாரத ரத்னா' விருது அறிவிக்கப்பட்டது. நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக சங்கரன்கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தேன். செல்கின்ற வழியில் ஜனாதிபதியிடமிருந்து தொலைபேசிச் செய்தி வந்திருப்பதாகவும், உடனடியாக அவர்களை நான் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. சங்கரன்கோவில் செல்கின்ற வழியிலேயே ஓரிடத்திலே காரை நிறுத்தித் தங்கி, அங்கிருந்து தொலைபேசி மூலமாக ஜனாதிபதியிடத்திலே தொடர்புகொண்டு, என்ன என்று அறிந்துகொள்ள விரும்பியபொழுது, ஜனாதிபதியே என்னிடத்திலே

1998 ஏப்ரல் 20] [திரு. கலைஞர் மு. கருணாநிதி]

பேசினார். அப்போது அவர், முறைப்படி ஒரு மாநிலத்திலேயுள்ள ஒரு முக்கியஸ்தருக்கு இதுபோன்ற பெரிய விருது வழங்கும்போது முதலமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டுமென்கிற அந்தக் கடப்பாட்டுடன், என்னிடத்திலே தகவலைத் தெரிவித்தார். திரு. சி.எஸ். அவர்களுக்கு இந்த விருதினை வழங்கப்போகிறோம், அதை அறிவிக்க இருக்கிறோம் என்று என்னிடத்திலே தகவலைச் சொன்னார். நானும் பாராட்டி, மகிழ்ந்து, என்னுடைய உள்ளத்தை அவர்களுக்குப் புலப்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக அந்தச் செய்தியை அவருக்குத் தெரிவித்து, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டேன்.

அதுமாத்திரமல்ல, சங்கரன்கோவில் சென்றேன். அங்கு நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் போட்டியிடுகின்றார்கள். தேர்தல் பிரச்சாரக் கூட்டம். அந்தக் கூட்டத்திலே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் கலந்துகொண்டார்கள். நானும், நம்முடைய அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தோம். அந்தக் கூட்டத்திலேயே, நான் பேசத் தொடங்கியவுடனேயே, 'ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே குழுமி இருக்கின்ற மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்' என்று குறிப்பிட்டு, 'திரு. சி.எஸ். அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது கிடைக்கிறது. அதை ஜனாதிபதி அறிவித்தார்கள், வருகின்ற வழியிலே அந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது' என்று சொல்லிவிட்டு, 'அவர்களை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்' என்று குறிப்பிட்டு, 'அவரை' பாராட்டும்முகத்தான் அங்கே அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் கையொலி மூலமாக, அவர்களுடைய பாராட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னேன். அவ்வாறே, குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும், மேடையில் இருந்தவர்களும் கையொலி எழுப்பி அன்றைக்கே பாராட்டுத் தெரிவித்திருக்கின்றோம்.

அதுமாத்திரமல்ல, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்ட அந்த வாசகங்களைக் கோடிட்டுக்காட்டி, திரு. சி.எஸ். அவர்களுடைய வீட்டிற்கு

ஒரு ஆள் மூலமாகவே கவர்னர் உரையை அனுப்பி வைத்து, திரு. சி.எஸ். அவர்களுக்கும் மற்றும் இருவருக்கும், யார், யார் ஆளுநர் உரையிலே பாராட்டப்பட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் அதை அனுப்பி வைத்திருக்கின்றேன். இவ்வளவுக்கும் பிறகு நான் பாராட்டவில்லையென்று சொன்னால், எப்பொழுதுமே என்னுடைய ஜாதகம் அப்படிப்பட்டது என்பதை மாத்திரம் சொல்லி அமைகின்றேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 5-முத்திரைத்தாள்கள்-நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 6-ஆவணப் பதிவு

(இ) கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்

(ஈ) கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான ஊரகத் தொழில் மற்றும் முத்திரைத்தாள், பத்திரப் பதிவுமீதான மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளைக் கூற வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த அரசினுடைய தொழில் கொள்கையின் மூலம், இளைஞர்களை ஊக்கப்படுத்துவது; அவர்களுடைய வாழ்க்கைத்தரம், பொருளாதார மேம்பாடு போன்றவைகளை ஊக்குவிக்கின்ற அடிப்படையிலேதான் திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, மாவட்டத் தொழில் மையங்களிலே வழிகாட்டும் சேவைப் பிரிவு என்று ஒன்று இருக்கிறது. அனைத்து லைசென்சுகளையும், அரசாங்க அனுமதிகளையும் ஒரே இடத்திலே பெறத்தக்க வகையிலே இந்த அரசாங்கம் ஒருமுனை இசைவுக் குழுவுக்கு ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரிய, போற்றுதலுக்குரிய விஷயமாகும்.